# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 மார்கழி 08 ஞாயிற்றுக்கிழமை 24.12.2023 கதிர் 408


# பாதாள உலகக் குழுவினருக்கு அவர்கள் பாணியிலேயே பதில்

## எச்சரிக்கிறார் பதில் பொலிஸ் மா அதிபர்

சாதாரண மக்களுக்கு எதிராகவோ அல்லது பொலிஸாருக்கு எதிராகவோ பாதாள உலகக் குழுவினர் ஆயுதமேந்திச்செயற்படும் பட்சத்தில் அவர்களது பாணியிலேயே பதிலளிப்பதற்கு பொலிஸ் அதிரடிப்படையினர் தயாராகவுள்ளனர் என்று பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார்.

நுகேகொட பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட 17 பொலிஸ் நிலையத்துடன் இணைந்து செயற்படும் சமூகக் குழுக்கள் முன்னெடுக்கப்படும் யுக்திய செயற்றிட்டம்சம்பந்தமாக நேற்றுத் தெளிவுபடுத்தப்பட்டது. இந்நிகழ்வில்உரையாற்றும் ☞2

## இது ரகசியம் அல்ல!

அடுத்த ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தல் இரண்டும் நடக்கும் என்று ஜனாதிபதி அறிவித்தாலும் அதில் எது முதலில் நடக்கும் என்கிற கேள்வி தொடர்ந்துகொண்டே இருக்கின்றது.

முதலில்பொதுத்தேர்தல்நடத்தப்படும் என ஆளும்தரப்புக்கு நெருங்கிய பல குழுக்களினால் ஊடகங்கள் ஊடாக ஒழுங்கமைக்கப்பட்ட பரப்புரை தொடர்ந்து முன்னெடுக்கப்படுகிறது. ஏறக்குறைய ஒரு மாத காலமாக இவர்கள் இத்தகைய தகவலையும் அரசியல் அலசல்களையும் 'பரப்பி' ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னதாக பொதுத் தேர்தல் நடத்தப்படும் என்று நாட்டுக்குக் காட்ட முயல்கின்றனர்.

ஆளும் தரப்பின் பல விசுவாசிகள் அரசியல் ஆதரவுடன் இது ☞2

## டெங்கு சிகிச்சை விடுதிகள் திறப்பு

டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துச் செல்கின்றமையால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் தற்காலிகமான இரண்டு டெங்கு விடுதிகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இந்தத் தகவலை யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலை பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.

கடந்த ஒரு சில வாரங்களாக அதிகரித்தஅளவில்டெங்குநோயாளிகள் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுவருகின்றனர். ☞2

# போதைப்பொருள் முடிவுவரை பொலிஸ் நடவடிக்கை தொடரும்

## அதிரடிப்படை அதிகாரி அறிவிப்பு

போதைப் பொருள் வர்த்தகர்கள் மற்றும் பாதாள உலகக் குழுவினருக்கு எதிராகத் தற்போது எடுக்கப்பட்டுவரும்நடவடிக்கைகள் போதைப் பொருள் முடிவு வரை முன்னெடுக்கப்படும் என்று பொலிஸ் விசேட அதிரடிப்படையின் சிரேஷ்ட பிரதிப்பொலிஸ் மா அதிபர்வருணஜயசுந்தர தெரிவித்தார்.

நுகேகொடபொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட 17 பொலிஸ்நிலையத்துடன் இணைந்து செயற்படும் சமூகக் குழுக்களால் முன்னெடுக்கப்படும் யுக்திய செயற்றிட்டம் சம்பந்தமாக நேற்றையதினம் தெளிவுபடுத்தப்பட்டது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மக்களுக்கு எதிராகச் செயற்படுபவர்களுக்கு இடமளிக்க முடியாது. தற்போதையசட்டத்துக்கு அமைவாக ஐந்து கிராம் ஹெரோயின் வைத்திருந்தால் அந்நபருக்குத் தூக்குத் தண்டனை விதிக்க முடியும்.

இலங்கைப் பொலிஸாருக்கு தேவையான சக்தியை விசேட அதிரடிப்படையினர்வழங்குகின்றார்கள். நுகேகொடவாக இருந்தாலும் சரி, மேல் மாகாணமாக இருந்தாலும்சரி நாட்டின் எப்பாகத்துக்கும் சுற்றிவளைப்பு நடவடிக்கை விரிவாக்கப்பட்டுள்ளது. போதைப்பொருள் முடிவு வரையில்இந்தச்செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ள - என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# ரணில் ஜனாதிபதியாகாதிருந்தால் நாட்டை மீட்டு இருக்கவே முடியாது

## விளக்குகிறார் சாகல ரத்னாயக்க

ஜனாதிபதிப்பதவியை ரணில் விக்கிரமசிங்க பெற்று முறையாகக. கையாண்டிருக்காது விட்டால் நாட்டை மீட்டெடுத்திருக்கவே முடியாது என்று ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும், பணிக்குழாம் பிரதானியுமான சாகலரத்நாயக்க தெரிவித்தார்.

நுகேகொட பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட 17பொலிஸ் நிலையத்துடன் இணைந்து செயற்படும் சமூகக் குழுக்கள் முன்னெடுக்கப்படும் யுக்திய செயற்றிட்டம் சம்பந்தமாக நேற்று தெளிவுபடுத்தப்பட்டது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் சமையல் எரிவாயு பற்றாக்குறை காணப்பட்டது. எரிபொருள் பற்றாக்குறை காணப்பட்டது. அத்தியாவசியப்பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவியது. மருந்துகள் காணப்படவில்லை. வேலை வாய்ப்புக்கள் அற்றுப் போனது. எமது வெளிநாட்டுக் கையிருப்பு பூச்சியமாக இருந்தது. நிதிக்கையிருப்பும் முழுமையாக அற்றுப் போனது. அவ்வாறான நிலையிலேயே ஜனாதிபதி நாட்டைப் பொறுப்பேற்றார்.

அவர் நாட்டைப் பொறுப்பேற்றபோது சட்டம்ஒழுங்குமுழுமையாகசீர்குலைந்திருந்தது. அன்று மக்களுக்கு என்ன செய் ☞2

# டிசெம்பர் 25 மற்றும் 26 மதுச்சாலைகள் மூடப்படும்

டிசெம்பர் 25 மற்றும் 26 ஆம் திகதிகளில் மதுபானசாலைகள் மூடப்படும் என கலால்வரித்திணைக்களம் தெரிவித்துள்ளது.

நத்தார் தினத்தை முன்னிட்டு டிசெம்பர் 25 மதுபானசாலைகள் மூடப்படுகின்றபோதும், சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் அனுமதி பெற்ற நட்சத்திர விடுதிகளுக்கு இது பொருந்தாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே, போயா தினத்தை முன்னிட்டு 26 ஆம் திகதி மதுபானசாலைகள் மூடப்படவுள்ளன. இது அனைத்து விடுதிகளுக்கும் பொருத்தமானது என்றுள்ளது.

# அந்நியச் செலாவணி இருப்பு 3.6 பில். டொலராக அதிகரிப்பு

நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு 3.6 பில்லியன் டொலர்களாக அதிகரித்துள்ளதாக தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புகள் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்த வருட இறுதிக்குள் டொலரொன்றின் பெறுமதி 365ரூபாவாக இருந்த நிலையில் தற்போது டொலரொன்றின் பெறுமதியை 320ரூபாவிற்கு கொண்டுவர முடிந்துள்ளது. அதற்கமைய டொலரின் பெறுமதியை 11சதவீதத்தால் குறைக்க முடிந்துள்ளது.

எதிர்மறையான பொருளாதார வளர்ச்சியைக் ☞2

# முகக் கவசம் அணியுமாறு மக்களுக்கு அறிவுறுத்து

பொதுமக்கள் மீண்டும் முகக்கவசம் அணியுமாறு ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தின் ஒவ்வாமை, நிர்பீடணம், உயிரணு தொடர்பான கற்கை நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர அறிவுறுத்தியுள்ளார்.

ஜே.என்-1 ஒமிக்ரோன் சி.ஜி பிறழ்வான புதியகொரோனாவைரஸ் திரிபு இலங்கையிலும் பரவ ஆரம்பித்துள்ளது, சதாரண மக்களுக்கு இதன் விளைவாக இலங்கையில் சளி போன்ற நிலைமை ஏற்படலாம் என்று அவர் எச்சரித்துள்ளார்.

எவ்வாறாயினும்இது தொடர்பில் தேவையற்ற அச்சம்கொள்ள வேண்டிதில்லை. மேலும் காய்ச்சல், இருமல், மணமின்மை மற்றும் சுவையின்மை, அதிக வெப்பம், சுவாசக் கோளாறு, உணவுதவிர்ப்பு மற்றும் வாந்தி என்பன குறித்த பிறழ்வின்தொற்றுநோய் அறிகுறிகளாகக் காணப்படுகின்றன. ஆகவே, இவ்வாறான ☞2

# தொடர்ந்து மூன்று நாட்களுக்கு சிறையில் விசேட பாதுகாப்பு

பொலிஸாருடன் இணைந்து விசேட பாதுகாப்பு வேலைத் திட்டத்தை இன்றும் நாளையும் நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாக சிறைச்சாலை ஆணையாளரும் ஊடகப்பேச்சாளருமான காமினி பீ திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

இன்றும் நாளையும் நத்தார் பண்டிகையான நாளைமறுதினமும் சிறைக்கைதிகளை உறவினர்கள் பார்வையிட வாய்ப்பளிக்க சந்தர்ப்பமளிக்கப் படவுள்ளது. இந்த 3 நாட்களிலும் கைதிகளை பார்வையிட அதிகளவானோர் வரக்கூடும் என்பதால் சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் துஷார ☞2

# போதைப் பொருள் கடத்தல்காரர்களுடன் தொடர்புடையவர்களே விமர்சிக்கின்றனர்

## பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் இப்படிக் கருத்து

போதைப்பொருள் கடத்தல்காரர்களுடன் தொடர்புடைய சட்டத்தரணிகளும் மதகுருமார்களுமே போதைப் பொருளைக் கட்டுப்படுத்தும் பொலிஸாரின்நடவடிக்கையை விமர்சிக்கிறார்கள் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

நுகேகொட பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட 17 பொலிஸ்நிலையத்துடன் இணைந்து செயற்படும் சமூகக் குழுக்களால் முன்னெடுக்கப்படும் யுக்திய செயற்றிட்டம் சம்பந்தமாக நேற்றையதினம் தெளிவுபடுத்தப்பட்டது. இந்நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

போதைப்பொருள் பாவனையாளர்களும், பாதாள உலகக் ☞8

# ஒரே நாளில் 2 ஆயிரம் பேர் கைது

போதைப்பொருள் பாவனை மற்றும் குற்றச்செயல்கள், சமூக விரோதசெயற்பாடுகளில் ஈடுபடுபவர்களை இலக்காகக் கொண்டு முன்னெடுக்கப்படும் விசேட சுற்றிவளைப்புகளுக்கமையடிசெம்பர் 22 முதல் டிசெம்பர் 24 அதிகாலை வரையான காலப்பகுதியில்மாத்திரம் 1,967 பேர் சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நாடளாவிய ரீதியில் போதைப்பொருள் வர்த்தகத்தில் ஈடுபடும் 4,665 பேரில் 6 நாட்களில் மாத்திரம் 3,640 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

தற்கமைய (2023.12.22 முதல் 2023.12.23.அதிகாலை) நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்புகளுக் கமைய 692 கிராம் ஹெரோயின், 393 கிராம் ஐஸ், 42 கிலோ கிராம், 100 கிராம் கஞ்சா, 235,680 ☞8

## இனி இது .....

தொடர்பில் நீண்ட செய்தித்தாள் கட்டுரைகளையும் எழுதி வந்தனர். ஆனால் உண்மை அதுவல்ல.

முதலில் பொதுத் தேர்தலை நடத்தினால். அதில் வெற்றி பெறும் எந்தத் தரப்பும் இரண்டு மூன்று நாட்களுக்கு மேல் தன்னை ஜனாதிபதி நாற்காலியில் இருக்க இடமளிக்க மாட்டாது என ஜனாதிபதி தனது நண்பரிடம் அண்மையில் விளக்கிக் கூறியிருந்தார். ஜனாதிபதித் தேர்தலை ஏன் முதலில் நடத்தவேண்டும் என்று ஜனாதிபதி கருதுகின்றார் என்பதற்கான ஆதாரம் அது.

இப்போது அதையும் தாண்டி ஜனாதிபதித் தேர்தலே முதலில் நடக்கும் என்றும் அதைத் தொடர்ந்து நாடாளுமன்றத் தேர்தலும் பின்னர் உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்களும் நடத்தப்படும் என்றும் ஜனாதிபதி ஆளும் தரப்பினருக்குத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தல் நடக்கும்போது பொது ஜன பெரமுனவின் வேட்பாளராக கோடீஸ்வர வர்த்தகர் தம்மிக்கப் பெரேராவே களமிறக்கப்படுவார், ரணிலுக்கு அங்கிருந்து ஆதரவு கிடைக்காது என்பது இப்போது தெளிவாகி விட்டது. அதனை மொட்டுக் கட்சியின் மூளையாகச் செயற்பட்டு வருபவரான பஸில் ராஜபக்ஷ திட்டமிட்டு கட்சியின் பொதுக் கூட்டத்தில் அரங்கேற்றினார்.

'அரகலய' போராட்டத்திற்குப் பின்னர் மொட்டுக் கட்சி பொதுக் கூட்டமொன்றை நடத்தாததால் கட்சி உறுப்பினர்களுக்கு கடும் மன உளைச்சலுக்கு உள்ளாயிருந்தனர். அதற்கு நிவாரணம் தேடுவதுடன் அடுத்த தேர்தல் வருடத்தை எதிர்கொள்வதற்குக் கட்சியைத் தயார்ப்படுத்துவதும் பஸிலின் தேவையாக இருந்தது. அதனாலேயே பின்னணியில் இருந்து கட்சி மாநாட்டுக்கான வேலைகள் அனைத்தையும் அவர் மேற்கொண்டார்.

கட்சியின் இந்த தேசிய மாநாட்டை வெற்றியடையச் செய்வதற்கு பசில் கடுமையாக உழைத்தார். அதற்காக நிறைய பணம் செலவிடப்பட்டது. நாடளாவிய ரீதியில் பிரசாரம் முன்னெடுக்கப்பட்டதுடன், கொழும்பு உட்பட நாட்டின் அனைத்து முக்கிய நகரங்களிலும் கட்சிக் கொடிகளை ஏற்றுவதற்கும் பசில் ஏற்பாடு செய்திருந்தார். திரைமறைவில் இருந்து நடவடிக்கைகள் அனைத்தையும் ஏற்பாடு செய்த பசில், மாநாட்டு நாளில் முன்வரிசை ஆசனங்களில் அமர வேண்டிய கட்சியின் மூத்த தலைவர்கள் மற்றும் தலைவர்களின் பட்டியலையும் தயாரித்தார். இதன்படி மஹிந்த, பசில், சமல், நாமல் ஆகியோரில் கட்சியின் மூத்த உறுப்பினர் அல்லாத மற்றுமொரு விசேட நபரின் பெயரையும் உள்ளடக்குவதற்கு பசில் நடவடிக்கை எடுத்தார். அது வேறு யாருமல்ல தம்மிக்க பெரேரா. அதன் மூலம் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர் யார் என்பது தொடர்பில் கட்சிக்கு மட்டுமன்றி நாட்டுக்கே தெளிவான குறிப்பை வழங்க பசில் திட்டமிட்டார்.

இப்படி அடுத்த தேர்தலில் ரணிலைப் பெரமுன ஆதரிக்கப்போவதில்லை என்று தெளிவாகத் தெரிந்த பின்னரும் முதலில் ஜனாதிபதித் தேர்தலை வைப்பதைத் தவிர ரணிலுக்கு வேறு தெரிவே இல்லை என்கின்றன கொழும்பு அரசியல் வட்டாரங்கள்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பாதாள ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

பொலிஸார் போதைப்பொருட்களை கைப்பற்றுவதாகக் கூறப்படுகின்றபோதும், நெத்தலிகளையே பொலிஸார் கண்டுபிடிக்கின்றனர் என்று குற்றம் சாட்டப்படுகின்றது. அந்தக் கூற்றில் உண்மையும் உள்ளது.

நெத்தலிகள் போதைப்பொருளுடன் வீதிக்கு இறங்குகின்ற சந்தர்ப்பத்திலேயே பொலிஸாரும் அவர்களை கைது செய்வதற்கும் போதைப்பொருளை கைப்பற்றுவதற்கும் செல்கின்றனர்.

மத்தியில் உள்ள சிறிய மீன்களைப் பிடித்தன் பின்னரே பெருமீன்களை எம்மால் கண்டறிய முடியும். அந்த நாள் வெகுதொலைவில் இல்லை என்பதை நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறிக்கொள்கின்றேன்.

போதைப்பொருளும், போதைப் பொருள் கடத்தல்காரர்களும் இருவேறு தரப்பினர் அல்லர். கடந்த 17ஆம் திகதியும் அதற்கு முன்னரான நிலைமைகளையும் நான் எடுத்துப்பார்த்தேன்.

தற்போது குற்றங்கள் குறைவடைந்து வருகின்றன. தற்போதைய நிலைமையில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டால் எதிர்வரும் ஆறுமாதங்களில் குற்றங்களை ஐம்பது சதவீதத்தினால் குறைத்துக் கொள்ள முடியும்.

போதைப்பொருள் கடத்தல்காரர்கள் முழுநாட்டிலும் உள்ளனர். இவர்கள் காலையில் குற்றங்களைச் செய்துவிட்டு மாலையில் அல்லது இரவில் போலியான கடவுச்சீட்டுக்கள் மூலமாக நாட்டை விட்டு வெளியேறுகின்றனர்.

காலையில் கொலை உள்ளிட்ட குற்றங்களை இழைத்து மாலையில் நாட்டை விட்டு வெளியேறும் முறைமை எதிர்வரும் ஜனவரி மாதம் முதல் முடிவுக்கு வரவுள்ளது. விமான நிலையத்தில் வைத்தே கைது செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இதேவேளை 35 பாதாள உலகக் குழுவினர் சிறைச்சாலைகளுக்குள் இருந்து குற்றங்களை வழிநடத்துகின்றனர். அவர்களை கட்டுப்படுத்துவதற்கான முதற்கட்ட வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சாதாரண மக்களுக்கு எதிராகவோ அல்லது பொலிஸாருக்கு எதிராகவோ பாதாள உலகக்குழுவினர் ஆயுதமேந்திச் செயற்படும் பட்சத்தில் அவர்களது பாணியிலேயே பதிலளிப்பதற்கு பொலிஸ் அதிரடிப்படையினர் தயாராகவுள்ளனர் என்றார்.

## டெங்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதில் குறிப்பாக ஆண் பெண் மருத்துவ விடுதிகளில் நோயாளர்கள் படுக்கைகள் இன்றி பெரும் சிரமப்படுகிறார்கள் .இந்த நிலைமையை சமாளிப்பதற்காக மேலும் இரு தற்காலிக மருத்துவ விடுதிகள் திறக்கப்பட்டன என்று அவர் தெரிவித்தார்.

## அந்நியச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொண்ட நாட்டை, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் சாதகமான பொருளாதார வளர்ச்சிக்கு கொண்டு வரப்பட்டுள்ளதோடு விவசாயம், கைத்தொழில் மற்றும் சுற்றுலாத்துறையை கடந்த வருடத்தை விடவும் மிக உயர்ந்த நிலைக்கு கொண்டுவர முடிந்துள்ளது.

மக்கள் கோரிய மாற்றங்களை ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் பல கொள்கையளவிலான தீர்மானங்களை அமுல்படுத்தியுள்ளது.

அத்துடன்;, தொழிலாளர்களுக்கு மதிப்பளிக்கும் வேலைத் திட்டத்தையும் முன்னெடுத்துள்ளது. மேலும் நாடு டிஜிட்டல்மயமாக்கப்பட்டு வருவதோடு டிஜிட்டல் பொருளாதார செயற்பாடுகளும் முன்னெடுக்கப்பட்டுள்ள என்றார்.

## ரணில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வதென்று புரியவில்லை. மக்கள் வீதியில் இறங்கி ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்கள். அவ்விதமான நிலையில் சட்டமொழுங்கை சீர்ப்படுத்தி, சொற்ப வாரங்களில் வரிசை யுகத்தினை முடிவுக்கு கொண்டு வந்தார் ஜனாதிபதி.

ஊழலும், மோசடிகளும் இல்லாதவொரு நாட்டையே மக்கள் எதிர்பார்க்கின்றனர். அன்று எம்முடன் கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடுவதற்கு எந்தவொரு சர்வதேச நாடும் முன்வரவில்லை. அந்த நிலைமையில் இருந்து மீண்டு பொருளாதாரத்தினை கட்டியெழுப்புவதற்கான வேலைத் திட்டத்தினை நாம் முன்னெடுத்துள்ளோம். ஜனாதிபதிப் பதவியை ரணில் விக்கிரமசிங்க பெற்று முறையாகக. கையாண்டிருக்காது விட்டால் நாட்டை மீட்டெடுத்திருக்கவே முடியாது.

இதனை நான் கூறுவதாக கருத வேண்டாம். சர்வதேச நாடுகளே தற்போது அந்த விடயத்தினை ஒப்புக்கொண்டுள்ளன. இலங்கை இவ்வளவு எளிதாக மீட்சி நிலைமையை அடையும் என்று அவர்கள் எதிர்பார்க்கவில்லை என்றும், மேலும் பத்தாண்டுகளில் தான் சுவாசிக்கக்கூடிய நிலைமையை அடையும் என்றும் அவை கருதியதாகவும் கூறுகின்றன.

தற்போது பொருளாதார மீட்சியை எவ்வாறு மேற்கொண்டீர்கள் என்று சர்வதேசத் தலைவர்கள் எம்மிடத்தில் வினவுகின்றனர். பிரான்ஸ் ஜனாதிபதி மக்ரோன் வேறெங்கோ செல்கின்றபோது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து மேற்படி விடயத்தினையே உரையாடிச் சென்றுள்ளார்.

அதுமட்டுமன்றி நாட்டை பொருளாதாரரீதியாக மீட்டெடுத்தமை எவ்வாறு அவ்விதமான ஆலோசனையை தமது நாடுகளுக்கும் வழங்குமாறும் பல்வேறு நாடுகளின் தலைவர்கள் தொடர்ச்சியாக அழைப்பு விடுத்தவண்ணமுள்ளனர் என்றார்.

## தொடர்ந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உபுல்தெனியவினால் அனைத்து சிறைச்சாலை அத்தியட்சகர்களுக்கும் உரிய பணிப்புரை விடுத்துள்ளது.

சிறைச்சாலை விதிமுறைகள் மற்றும் சுகாதார பாதுகாப்பு நடைமுறைகளை பின்பற்றி நாட்டின் அனைத்து சிறைச்சாலைகளிலும் இந்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

கைதிக்கு தேவையான உணவை மாத்திரமே உறவினர்கள் கொண்டுவர முடியும் என்பதுடன் தடைசெய்யப்பட்ட பொருட்கள் சிறைச்சாலைக்குள் அனுமதிக்கப்படமாட்டாது என்பதில் கடுமையான கரிசனைகளைக் கொண்டுள்ளோம் என்றார்.

## முகக் கவசம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நோய் அறிகுறிகள் தென்படும் பட்சத்தில் வைத்தியரை நாடுவதே பொருத்தமானதாகும் என்றார்.

இதேவேளை, லக்ஸம்பேர்க் இராச்சியத்தில் கண்டறியப்பட்ட இந்த கொரோனா பிறழ்வு தற்போது இந்தியாவில் பரவி வருகின்ற நிலைமையில் அங்கு இதுவரை பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 2660 ஐ கடந்துள்ளது.

இந்தியாவின் கேரள மாநிலத்தில் பரவிய இந்த உப பிறழ்வு தற்போது கோவா மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களிலும் பரவியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பொலிஸிடமிருந்து தப்ப முயன்ற இருவர் விபத்தில் சிக்கிக் காயம்



தலைக்கவசம் அணியாமல் மோட்டார் சைக்கிளில் பயணித்த இரண்டு இளைஞர்கள் பொலிஸாரிடமிருந்து தப்புவதற்காக வேகமாக சென்றபோது காருடன் மோதுண்டு விபத்துக்குள்ளானார்.

யாழ்ப்பாணம் பலாலி வீதி கந்தர்மடம் சந்தியில் குறித்த விபத்துச் சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றது.

காயமடைந்தவர் சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் நல்லூர் பகுதியில் போக்குவரத்து பொலிஸார் கடமையில் ஈடுபட்டிருந்த போது அவ் வீதியில் வந்த இரண்டு இளைஞர்கள் தலைக்கவசம் அணியாது மோட்டார் சைக்கிளில் சென்றுள்ளனர்.

இதனை அவதானித்த போக்குவரத்து பொலிஸார் இரண்டு இளைஞர்களும் செலுத்திச் சென்ற மோட்டார் சைக்கிளை துரத்திச் சென்றனர்.

பொலிஸாரிடமிருந்து தப்பித்து செல்வதற்காக அதி வேகத்தில் பயணித்த மோட்டார் சைக்கிள் கந்தர்மடம் சந்தியில் பயணித்த காருடன் மோதுண்டு விபத்துக்குள் ளானது.

சம்பவ இடத்திலிருந்து மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர் தப்பித்தோடிய நிலையில் மற்றொருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





# சர்வதேச லயன்ஸ் கழகங்களினால்; வன்னி மாவட்ட மக்களுக்கு உதவி!




சர்வதேச லயன்ஸ் கழகங்களின் எல்.சி.ஐ.எவ். நிதியுதவியில் இலங்கை லயன்ஸ் கழகம் மாவட்டம் 301 பி1 ஆளுநர் லயன் பிளஸிடஸ் எம் பீற்றரின் முயற்சியால் வடக்கு மாஜூண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸின் ஒருங்கமைப்பில் வன்னியில் வெள்ளம் பாதித்த தெரிவுசெய்யப்பட்ட குடும்பங்களுக்கு 33 லட்சம் ரூபா மொத்தப் பெறுமதியில் 1000 உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்;கப்பட உள்ளன.

இதற்கான அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று (சனிக்கிழமை) காலை 9 மணிக்கு வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் ஜனாதிபதியின் வடக்குக்கான இணைப்பாளர் இளங்கோவன், ஆளுநர் செயலக உதவிச் செயலாளர் ஏகாந்தன் ஆகியோரும், லயன்ஸ் கழகம் சார்பில் ஆளுநர் சபை பிரதிச் செயலாளர் லயன் பரமேஸ்வரன், ஆளுநர் சபை ஆலோசகர்களாகிய லயன் ஜெ.ரஜீவன், லயன் சி.ஹரிகரன், லயன் கிங்ஸ்ரன் ரமேஸ் மற்றும் லயன்ஸ் கழக முக்கியஸ்தர்களும் கலந்து கொண்டனர்.

இந்;த உதவித்திட்டத்தில் 3250 ரூபா பெறுமதியான 500 உலருணவுப் பொதிகள் கிளிநொச்;சி மாவட்டத்துக்கும், 300 பொதிகள் முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் 200 பொதிகள் மன்னார் மாவட்டத்துக்கும் அந்தந்த மாவட்ட செயலகத்தால் தெரிவுசெய்யப்பட்ட பயனாளிகளுக்கு வழங்கிவைக்கப்பட உள்ளன.

# யாழ்ப்பாண மருத்துவபீடத்திற்கு உடல் தானம் செய்த பெரியவர்



தான் இறந்தபின் தனது உடலையாழ்மருத்துவபீடத்திற்கு கொடுக்குமாறுகூறிபிறவியிலேயே பார்வையற்றஒருவர்அமரத்துவம் அடைந்துள்ளார்.

நாவற்குழியை பிறப்பிடமாகவும் நுணாவிலை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா தம்பிராசா இயற்கையிலேயே பார்வையை இழந்த ஒருவர்.

இருப்பினும் தனது அயராத முயற்சியால் சுய தொழில் முனைவராக தன்னுடைய இறுதிக் காலம் வரை வாழ்ந்து வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்திலிருந்துமுதன் முதலாக சீதுவைக்குச் சென்று பார்வையற்றவர்களுக்காக நடத்தப்பட்ட கதிரை பின்னும் பயிற்சிநெறியில்கலந்துகொண்டு தேர்ச்சிபெற்றுயாழ்ப்பாணத்திற்கு திரும்பி வந்து கதிரை பின்னும் தொழிலை ஆரம்பித்ததோடு மட்டுமல்லாது இங்கிருந்த பல பார்வையற்ற இளைஞர்களுக்கு கதிரை பின்னும் தொழிலை பயிற்றுவித்து அவர்களையும் தொழில் முனைவோராக உருவாக்கிய பெருமை இவரை சாரும். யாழ்.விழிப்புலனற்றோர் சங்கத்தை உருவாக்கியவர்களில் இவரும் ஒருவர்.

அதுமட்டுமன்றி, ஆரம்ப காலங்களில் இருந்தே தென்மராட்சியில் தமிழரசு கட்சியின் பிரசார நிகழ்வுகளில் இவர் இல்லாத மேடைகளே இல்லை என்று சொல்லும் அளவிற்கு தமிழரசுக் கட்சியின் அர்ப்பணிப்பு உள்ள ஒரு பிரசாரியாக இருந்துள்ளார்.

மிகுந்த இறைநம்பிக்கையும் கர்நாடக இசை மீது அதீத கேள்வி ஞானத்தோடு கூடிய ஈடுபாடும் உடைய தம்பிராசா இப்பொழுது அருகி வருகின்ற ஓதுவார் எனப்படுகின்ற பணியையும் தன் இறுதிக் காலம் வரை செய்து வந்த இவர் தனது 93 வயதில் 19.12.2023 வினாசித்தம்பி வீதி சாவகச்சேரியிலுள்ள அவரது மகனின் இல்லத்தில் இறையடி சேர்ந்துள்ளார்.

அவர் தன் சுய விருப்பின் பேரில் தனது உடலை மருத்துவ மாணவர்களின் கற்றல் முன்னேற்றத்திற்கு பயன்படுத்துவதற்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு தானமாக வழங்கியுள்ளார்.

அவரதுஉடல்அன்றேயாழ்பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளது.

தன்னுடைய பிறப்பிற்கான பலனாக தனக்கு தெரிந்த அறிவையும் , ஞானத்தையும் தன்னோடு வைத்திருக்காது மற்றவருக்கு புகட்டும் ஆசானாகவும், ஆலயமெங்கும் இறை புகழை பாடும் ஒரு தொண்டனாகவும், இறக்கும் வரையிலும் தன் மீது கொண்ட அதீத நம்பிக்கையோடு என் வேலைகள் அனைத்தும் நானே செய்வேன் என்ற ஓர்மத்தோடும் வாழ்ந்து சென்றுள்ளார் தம்பிராசா. (05)

# வவுனியாவில் 1,253 பேருக்கு இலவச கண் சத்திரசிகிச்சை




இந்தியமற்றும்இலங்கைவைத்தியநிபுணர்களால் வவுனியாவில் 1253 பேருக்கு இலவச கண் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வவுனியா வைத்தியசாலை பணிப்பாளர் ஜே.எம்.நிலக்சன் கருத்துத் தெரிவிக்கையில் - வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சாள்ஸின் நெறிப்படுத்தலில் வைத்திய நிபுணர் சர்வேஸ்வரனின் முயற்சியால் இந்தியத் துணைத் தூதரகத்துடன் இணைந்து இலவச கண் சத்திர சிகிச்சை முகாமொன்று முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இம்மாதம் 11 ஆம் திகதி முன்னெடுக்கப்பட்ட குறித்த சத்திர சிகிச்சை முகாம் இம்மாதம் 21 ஆம் திகதி வரை முன்னெடுக்கப்பட்டிருந்தது. இதில் 1253 பேர் கலந்துகொண்டு சிகிச்சை பெற்றிருந்தனர். (05)

# மாணிக்க வாசகர் மாசிலா மாணிக்கம்





இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
மன்னவன் பாண்டியன் மாபெரும் மண்டபம்
விண்ணவர் வியக்கவே மண்ணகம் மிளிர்ந்தது

பாண்டியன் அவையினைப் பார்ப்பவர் வியந்தனர்
பசுந்தமிழ் புலவர்கள் பாங்குடன் நின்றனர்
ஆக்கிய பாடலை அவையேந்தி வந்தனர்
அதற்குரை பகர்ந்தனர் அனைவரும் மகிழ்ந்தனர்

பண்ணொடு பாடினார் பலவுரை பகர்ந்தனர்
மன்னவன் வதனமோ மலர்ந்துமே நின்றது
எண்ணிலா பொருள்களை மன்னவன் ஈந்தனன்
பாடிய புலவர்கள் பரவசம் எய்தினார்

கற்றவர் பலரையும் பாண்டியன் அணைத்தான்
கடவுளை நம்பினான் கண்ணியங் காத்தான்
மற்றவர் துயருறா வழியிலே நடந்தான்
வாழ்விலே அறத்தை மாண்புடன் காத்தான்

நல்லமைச்சர் நாளும் நற்றுணையே என்று
வல்லவரை நாடி நல்லசபை அமைத்தான்
முதலமைச்சர் நாட்டின் முதுகெலும்பாய் அமைய
வாதவூர் வந்தாரை மனங்கொண்டான் மன்னன்

வாதவூர் பிறந்தாரை மன்னவன் மதித்து
தென்னவன் பிரம்மராயன் பட்டத்தைக் கொடுத்தான்
பற்றற்ற மனத்துடனே பதவியிலே அமர்ந்தார்
பாண்டிய நாட்டின் கண்ணியம் காத்தார்

பாண்டிய மன்னன் குதிரைப் படையினை
பெருக்கிட மனத்திலே விருப்பங் கொண்டான்
திருப் பெருந்துறையிலே சிறந்த குதிரைகள்
இருப்பதாய் அறிந்தான் வாங்கிட விரும்பினான்

அமைச்சர்க்கு அமைச்சரை அழைத்தான் அரசன்
அள்ளிக் கொடுத்தான் பொன்னும் பொருளும்
குதிரை வாங்கிடப் பணித்தான் பாண்டியன்
மதுரையை விட்டு மந்திரி அகன்றார்

திருப் பெருந்துறையில் தெரிசனம் கண்டார்
பொன்னை மறந்தார் தன்னை மறந்தார்
குருவடி வீழ்ந்தார் குதிரையை மறந்தார்
பவவினை அகலப் பற்றினார் குருவடி

பொன்னைப் பொருளைத் தானம் செய்தார்
புனிதமாம் கோவில் பணிகளைச் செய்தார்
அல்லும் பகலும் குருவை நினைந்தார்
அனைத்தும் துறந்தார் அமர்ந்தார் குருநிழல்

குதிரை வாரா கவலை கொண்டான்
சேதியை அறிந்து சினமதில் ஏறினான்
அழைத்தான் அமைச்சரை வினவினான் பாண்டியன்
அமைச்சர் பகர்ந்தார் வந்திடுங்குதிரை ஆவணிமூலம்

பார்த்தான் பார்த்தான் பாண்டியன் பார்த்தான்
ஏய்த்தார் அமைச்சர் என்றுமே எண்ணினான்
குதிரைகள் எதனையும் காணா வரசன்
கொண்டான் கோபம் கொடுஞ்சிறை அடைத்தான்

அடியார் உள்ளம் அறிந்தவன் ஆண்டவன்
குதிரைப் பாகனாய் கொணர்ந்தார் குதிரையை
அரசன் மகிழ்ந்தான் அமைச்சரை மீட்டான்
அன்றிர வதிர்ச்சி அங்கே நடந்தது

பரிகள் அனைத்தும் நரியாய் மாறின
கடித்தன குதறின கலக்கமே எழுந்தது
மன்னன் கோவம் எல்லையைக் கடந்தது
வாதவூர் பிறந்தார் வதையினில் சுருண்டார்

அடியார் துயரைக் கண்டான் ஆண்டவன்
ஆறாம் வைகையைப் பெருகிடச் செய்தான்
பாண்டியன் பதறினான் வெள்ளம் பரந்தது
பாண்டிய மக்களை படர்ந்தது துயருமே

வெள்ளம் பரவா தடுத்திட அனைவரும்
அவரவர் பகுதியை அடைத்திடப் பணித்தான்
செம்மனச் செல்வி திகைத்தாள் அடைத்திட
இரங்கிய எம்பிரான் உதவிட வந்தனர்

பிட்டை விற்றுப் பிழைக்கும் கிழவி
பிட்டைக் கூலியாய் தருவேன் என்றாள்
பிட்டைச் சுவைத்தார் வேலையை மறந்தார்
கிழவியின் வேலை கிடப்பிலே கிடந்தது

அதிகாரி வந்தார் கிழவியை மிரட்டினார்
உறங்கிடும் வேலை யாளினைக் காட்டினாள்
எடுத்தார் பிரம்பை அடித்தார் முதுகினில்
விண்ணும் அதிர்ந்தது மண்ணும் அதிர்ந்தது

அண்ட சராசரம் அனைத்திலும் விழுந்தது
அரசன் பயந்தான் அனைவரும் வெருண்டனர்
வாதவூர் பிறந்தாரை நாடினான் மன்னவன்
மன்னிக்க மன்னிக்க என்றுமே வேண்டினான்

வாதவூர் பிறந்தார் மதுரைவிட் டேகினார்
மணி மணியாகப் பாடினார் இறையினை
திருவினைப் பற்றியே மலர்ந்திட்ட யாவுமே
தேனாய் தித்திக்கும் திருவாசக மானது

மாணிக்க வாசகர் மாசிலா மாணிக்கம்
வாழ்வெலாம் சிவனை வாழ்த்திய மாமணி
தேசுடைத் தமிழினைச் சிந்தையில் ஏற்றி
வாசகம் கோவையை வழங்கிய வள்ளல்

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## சரியான நடவடிக்கையே தேவை

காவல்துறையினரும் அவர்களோடிணைந்த சிறப்பு அதிரடிப் படையினரும் நாட்டில் திடீரென போதைப் பொருள் கடத்தல்காரர்களையும் பாதாள உலகக் குழுவினரையும் கட்டுப்படுத்தும் நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளனர். இவர்களைக் கட்டுப்படுத்துவதற்குத் தாம் ஈவு இரக்கமற்ற நடவடிக்கைகளை எடுக்கத் தயங்கப்போவதில்லை என்று பதில் காவல் மா அதிபரும் பொது மக்கள் பாதுகாப்புத்துறை அமைச்சரும் தெரிவித்திருக்கின்றனர். அவர்களது கருத்துக்கள் கடும் கண்டனத்துக்கும் உள்ளாகியுள்ளன.

காவல்துறையினரின் இந்த நடவடிக்கைக்கு முன்னதாக பாதாள உலகக் குழுவினரின் பழிக்குப் பழி வாங்கும் படுகொலைகள் நாட்டில் அதிகரித்திருந்தன என்பது உண்மை. ஒவ்வொரு வாரமும் ஏதாவது ஒரு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தவறாமல் இடம்பெற்று வந்தது. அது தொடர்பில் காவ்துறையினர் எந்தவித உருப்படியான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை என்கிற குற்றச்சாட்டும் பலமாக எழுப்பப்பட்டு வந்தது. மறுபுறத்தில் நாடு முழுவதுமே போதைப் பொருள் வியாபாரம் அதிகரித்து வந்தது. மாணவர்கள் மத்தியிலும் இதன் தாக்கம் மிகப் பெருமளவில் அதிகரித்தது. அது குறித்தும் கடுமையான கண்டனங்கள் எழுப்பப்பட்டன.

இவற்றுக்கெல்லாம் பதிலளிக்குமாப் போல காவல்துறையினர் இப்போது ஒரேடியாக நடவடிக்கைகளைத் தொடங்கியுள்ளனர். இந்த நடவடிக்கையில் நாளாந்தம் ஆயிரக்கணக்கானவர்கள் கைது செய்யப்படுகின்றார்கள். அவர்களில் நூற்றுக்கணக்கானவர்கள் விளக்கமறியலில் வைக்கப்படுகின்றார்கள். இப்படி ஆயிரக்கணக்கில் நடக்கும் கைதுகளால் போதைப் பொருள் வர்த்தகம் மற்றும் பாதள உலக நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்திவிட முடியுமா என்றால், இல்லை. ஏனெனில் இப்போது கைது செய்யப்படுபவர்கள் இந்தக் குற்றங்களின் சூத்திரதாரிகள் அல்லர்.

இவர்கள் அனைவரும் தங்கள் அன்றாடப் பிழைப்புக்காக அல்லது தமது போதைத் தேவைக்காக மிகச் சிறு அளவில் இந்தக் குற்றங்களோடு சம்பந்தப்பட்டவர்கள். இவர்களைக் கைது செய்வதால் இந்த வியாபாரத்தை மந்தப்படுத்த முடியுமே தவிர, தடுத்துக் கட்டுப்படுத்த முடியாது. இந்தக் குற்றங்களின் சூத்திரதாரிகள் தண்டிக்கப்படாதவரை குற்றங்கள் இல்லாமல் போவதற்கான வாய்ப்புக்கள் இல்லை. இதனைப் பதில் காவல் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனும் ஏற்றுக்கொள்கிறார். இப்போது கைதாகும் நபர்களில் இந்தக் குற்றங்களுக்கான சூத்திரதாரிகளோ இடைநிலையில் இருக்கும் குற்றவாளிகளோ இல்லை என்பதை அவரும் ஏற்றுக்கொள்கிறார்.

தமது இந்த நடவடிக்கையைத் தொடர்வதன் மூலம் சூத்திரதாரிகளைத் தாம் கைது செய்துவிடுவோம் என்று அவர் கூறுகின்றார். ஆனால், அத்தகைய சூத்திரதாரிகள் அரசியல் செல்வாக்கும் பண பலமும் படைத்தவர்களாக இருக்கின்ற நிலையில் காவல் மா அதிபர் சொல்வது எவ்வளவு தூரத்திற்குச் சாத்தியம் என்பது கேள்விக்குறியே. அத்தோடு இப்படியான தீடீர் அதிரடி நடவடிக்கைகளால் மட்–டும் இத்தகைய குற்றங்களைக் குறைக்க முடியாது. தொடர்ச்சியான நீடித்த டவடிக்கைகள் மூலம் மட்டுமே அது சாத்தியமாகக்கூடும்.

இப்போதைக்கு காவல்துறையினரின் நடவடிக்கைகள் மூலம் சிறைச்சாலைகள் மட்டுமே நிரம்பி வழியப் போகின்றன. ஏற்கனவே அளவுக்கு அதிகமான நெரிசலைக் கொண்டிருக்கக்கூடிய சிறைச்சாலைகளில் நாளாந்தம் பல நூற்றுக்கணக்கானவர்களை அடைப்பதன் மூலம் அந்த நெருக்கடி அதிகரிக்கப் போகின்றது. இது வேறு விதமான சிக்கல்களைத் தோற்றுவிக்கப்போகின்றது. இதனால் இப்போது கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர்களையும்கூட நீண்ட நாள்களுக்கு மறியலில் வைக்க முடியாத நிலமையே தோன்றும்.

அந்தவகையில்எப்படிப்பார்த்தாலும்காவல்துறையினரின் நடவடிக்கைஒருகண்துடைப்புநாடகமாகமட்டுமேதெரிவதைத் தவிர்க்க முடியவில்லை. இதைக் கைவிட்டு குற்றங்களைக் குறைப்பதற்கு முறையான தெளிவான அரசியல் கலப்பற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவேண்டியது அவசியம்.

# உலகப் போக்கு தரும் அச்சம்

ராஜன்குறை


Reference Our Result

மானுடம் முன்னேறுகிறது என்ற எண்ணம், பதினெட்டு (1700+1799), பத்தொன்பதாம் (1800-1899) நூற்றாண்டுகளில் வலுவாக இருந்தது. அச்சு ஊடகத்தின் பெருக்கம், இயந்திரங்களின் பெருக்கம், தொழிற்புரட்சி, போக்குவரத்துச் சாதனங்களின் வளர்ச்சி ஆகியவற்றுடன் இணைந்த குடியரசு–மக்களாட்சித் தத்துவங்களின் வளர்ச்சி என்பன நிச்சயமாக மானுடப் பொது நன்மை குறித்த சிந்தனைகளை வலுப்பெறச் செய்தது. உலகக் குடிநபர் என்கிற கருத்தாக்கத்தைச் சிந்திக்க முடிந்தது.

இருப்பினும் இயற்கையிலிருந்து அந்நியப்படுதல், வாழ்க்கை வணிகமயமாதல், நுகர்வுப் பெருக்கம் குறித்த கவலைகளும் தோன்றத்தான் செய்தன. ஆனாலும் தேசிய அரசுகளின் உருவாக்கம், புதிய சுதந்திரவாதச் சிந்தனைகள், தொழிலாளர் இயக்கங்கள் எனப் புத்துலகம் குறித்த, மானுடப்பொது நன்மை குறித்த நம்பிக்கைகளும் பெருகவே செய்தன. இருபதாம் நூற்றாண்டின் இரண்டு உலகப் போர்களும், ஹிட்லரின் யூதப் படுகொலையும், அணு ஆயுதத்தின் தோற்றமும் மானுட எதிர்காலம் குறித்த பெருத்த அவநம்பிக்கையை உருவாக்கின.

சுதந்திரவாத, பொது உடைமை லட்சியங்களால் பனிப்போர் கால ஆயுத, அதிகாரப் போட்டி உருவாக்கிய கசப்புகளை, சமரசங்களைக் கடக்க முடியவில்லை. இருப்பினும், தொடர்ந்த அறிவியல் தொழில்நுட்ப வளர்ச்சியும், மக்களாட்சி நடைமுறைகளும் மானுடப்பொது நன்மை குறித்த சிந்தனைகளைத் தக்கவைக்க முயன்றன.

இந்தப் பின்னணியில், நிறைவு பெறும் 2023ஆம் ஆண்டை மதிப்பிட்டுப் பார்த்தால் இரண்டு அம்சங்கள் முக்கியமானவையாகத் தோன்றுகின்றன: ஒன்று, செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு பெருகுவது; மற்றொன்று, மானுடப் பொது நன்மைச் சிந்தனைகளின் மிகப்பெரிய தேக்கம், பயனின்மை.

### பெருகும் செயற்கை நுண்ணறிவு

ஆர்ட்டிஃபிசியல் இன்டெலிஜன்ஸ் என்றும் சுருக்கமாக ஏ.ஐ. (AI) என்றும் அழைக்கப்படும் கணினி நுண்ணறிவுச் செயலிகளில் பெரும் பாய்ச்சல்கள் எட்டப்பட்டுள்ளன. சாட்ஜிபிடி என்கிற செயலி மூலம், ஏ.ஐ. பரவலான பொதுப் பயன்பாட்டுக்கு வந்துள்ளது. தனிநபர்கள் பொழுதுபோக்காக அதைப் பயன்படுத்தி மகிழ, பல்வேறு வர்த்தக, தொழில் நிறுவனங்கள் அவற்றைத் தங்கள் பணிநிமித்தமாகவே பயன்படுத்தத் தொடங்கியுள்ளன. இந்தப் பயன்பாட்டின் மூலம் போலி செய்தல் என்பது சுலபமாகி உள்ளது. ஆழ்நிலைப் போலிகள் (deep fake) என்னும் வகையிலான பிம்பங்கள் உலா வரத் தொடங்கியுள்ளன. இவற்றைத் தயாரிப்பது செயற்கை நுண்ணறிவு மென்பொருள்களால் சுலபமாகி உள்ளது.




உதாரணமாக, யார் வேண்டுமானாலும் எந்தக் காணொளிகளையும் பயன்படுத்தி முற்றிலும் வேறு மாதிரியான காணொளியை உருவாக்கலாம். ரஷ்ய அதிபர் புடின், உக்ரைனுடன் போர் நிறுத்தத்தை அறிவிப்பதாகப் பரவிய காணொளி ஓர் உதாரணம். உண்மையில், புடின் அப்படி எதையும் செய்யாத நிலையில், போலியான காணொளியைச் சிலர் பரப்பினார்கள். தங்கள் செல்பேசியில் இப்படியான காணொளிகளைப் பார்ப்பவர்கள் உண்மைக்கும் பொய்க்கும் வேறுபாடு காண இயலாமல் திணறுகின்றனர்.

இந்தப் போலி செய்தல் பிரச்சினை தவிர, மனித அறிவாற்றல் செய்யும் பணிகளைச் செயற்கை நுண்ணறிவு செய்யத் தொடங்கினால் மேலும் பல தளங்களில் வேலையிழப்பு ஏற்படும் வாய்ப்பு உள்ளது. செயற்கை நுண்ணறிவின் பயன்பாடுகளுக்கான நெறிமு–றைகளை வகுக்க ஐ.நா. ஒரு சர்வதேசக் குழுவை உருவாக்கியுள்ளது. இனிவரும் ஆண்டுகளில் மிக முக்கியமான சவால்களைச் செயற்கை நுண்ணறிவுப் பயன்பாடு உருவாக்கும் சாத்தியம் உள்ளது. அறிவியல் புனைகதைகளின் அச்சங்கள் உண்மையாகிவிடுமோ என்று தோன்றுகிறது.

### அருகும் பொது நன்மைச் சிந்தனை

2022இல், உக்ரைன் மீது ரஷ்யா தொடுத்த போர் முடிவுக்கு வரவில்லை. உலக நாடுகளால் ரஷ்யாவைக் கட்டுப்படுத்த முடியவில்லை; தனிமைப்படுத்தவும் முடியவில்லை. இந்தியா உள்பட அந்தந்த நாடுகளின் பொருளாதார நலனைக் கருதி, அவை ரஷ்யாவுடன் வர்த்தக உறவுகளை மேற்கொள்கின்றன. அணு ஆயுத நாடொன்றைத் தாக்குவது என்பது சாத்தியமுமில்லை. அதேவேளை, ரஷ்யா உக்ரைனைத் தாக்குமளவுக்குச் சென்றதற்குக் காரணம், அமெரிக்கா தலைமையிலான நேட்டோ கூட்டமைப்பின் அதிகாரக் குவிப்பு முனைப்புதான் என்பதையும் புறக்கணிக்க முடியாது.

உலகில் 192 நாடுகள் ஐ.நாவில் உறுப்பினர்களாக இருந்தாலும், 20 நாடுகள்தான் மக்கள்தொகையிலும் பொருளாதார ஆற்றலிலும் குறிப்பிடத்தக்கவை–யாக இருக்கின்றன. இவை ஜி–20 என்ற பெயரில் ஒவ்வோர் ஆண்டும் சந்திக்கின்றன. இந்த ஆண்டு இந்தியாவின் தலைமையில் சந்திப்பு இந்தியாவில் நிகழ்ந்தாலும், இந்தச் சந்திப்புகளால் உலகப் பொது நன்மைக்கான எந்த உருப்படியான முன்மு–யற்சியையும் மேற்கொள்ள முடிவதில்லை. வாய் உபசாரமாகப் பேசுவதைத் தவிர பிரச்சினைகள் தீர்க்கப்படுவதில்லை.

உக்ரைன் போர் தொடரும் நிலையில், ஐம்பதாண்டுகளாக உலக நாடுகளால் தீர்க்க முடியாத இஸ்ரேலின் பாலஸ்தீனி–யர்கள் மீதான மேலாதிக்கப் போக்கு, மீண்டும் பெரும் வன்முறைக்கு வழிவகுத்துள்ளது. காசா பகுதியைக் கட்டுக்குள் வைத்திருக்கும் ஹமாஸ் அமைப்பு, அரசியல் தீர்வு எட்டப்படாததால் விரக்தியடைந்து ஒக்டோபர் மாதம் இஸ்ரேலுக்குள் புகுந்து தீவிரவாதத் தாக்குதல்களை நிகழ்த்தியது; ஆட்களைக் கடத்தியது.

இதனால் வெகுண்டெழுந்த இஸ்ரேல், அமெரிக்காவின் ஆதரவுடன் காசாவின் பொது மக்கள் மீது ஈவிரக்கமற்ற கொலைவெறித் தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது. உலகெங்கும் சிந்தனையாளர்களும், பொதுமக்களும் கடும் கண்டனங்களைத் தெரிவித்தும் எந்தப் பயனும் இல்லை. ஐ.நா. போர் நிறுத்தம் கோரி இயற்றிய தீர்மானத்தின் பயன் என்ன? பொது நன்மை குறித்த சிந்தனைகளாலோ, இயக்கங்களாலோ அப்பாவி மக்கள் கொன்றுகுவிக்கப்படுவதைத் தடுக்க முடிந்ததா? ‘உலகின் கருத்து’ என்ற உருவகத்தின் மதிப்புதான் என்ன?

உலக நாடுகள் மீண்டும் இரு அணிகளாகப் பிரிவது தெளிவாகத் தெரிகிறது. சீனா, ரஷ்யா, வட கொரியா, ஈரான் என்று ஒரு வலிமையான அணு ஆயுத, பொருளாதாரக் கூட்டணி அமெரிக்கா தலைமையிலான நாடுகளுக்கு எதிராக உருவாகியுள்ளதை யாரும் மறுக்க முடியாது. ஆப்கானிஸ்தானில் தாலிபான்கள் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றியது, ஹமாஸின் இஸ்ரேல் மீதான தாக்குதல், ரஷ்யாவின் உக்ரைன் மீதான தாக்குதல் ஆகிய நிகழ்வுகளின் பின்னால் இந்தக் கூட்டணியின் கரம் செயல்படுகிறது.

(9ஆம் பக்கம் பார்க்க...)

காலைக்கதிர் Kalaikkathir

# பரிகாரப் பூசை எனக் கூறி தங்க நகைகள் அபகரிப்பு

உணவக உரிமையாளர் ஒருவரின் மனைவியிடம் பரிகார பூஜை செய்வதாக கூறி தங்க நகைகளை அபகரித்து தலை மறைவாகியுள்ள இரு இந்தியர்கள் குறித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக கல்முனை தலைமையக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கல்முனை தலைமையகப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட உணவகம் ஒன்றில் கடந்த புதன்கிழமை இரவு இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாதிக்கப்பட்டவர்கள் வியாழக்கிழமை பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டிற்கமைய விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

சம்பவ தினமன்று இரு இந்தியர்கள் பரிகார பூஜை தொடர்பாக இருவேறு சந்தர்ப்பங்களில்உணவகஉரிமையாளரது மனைவியிடம் உரையாடியுள்ளனர்.

இதற்கமைய குறித்த பரிகார பூஜை தொடர்பில் சம்பவ தினமன்று இரவு குறித்த உணவகத்திற்கு வருகை தந்த இரு இந்தியர்களும் தனிமையில் இருந்த பெண்ணை அணுகி பரிகார பூஜை தொடர்பில் குறிப்பிட்டுள்ளனர்.

இதன் போது குறித்த பூஜைக்கு இணங்கிய அப்பெண் தன்னிடம் இருந்த தங்க மாலை உள்ளடங்கலாக ஏனைய நகைகளைஇருஇந்தியர்களும்குறிப்பிட்டபடி மண்சட்டியில் போட்டு மூடி பூஜைக்கு கொடுத்துள்ளார்.

இவ்வாறு பூஜை இடை நடுவில் சென்ற போது பூஜைக்காக கொள்வனவு செய்யப்பட்ட தேசிக்காய் ஒன்றை வீட்டின் உள்ளே வைக்குமாறு அப்பெண்ணிடம் கூறியுள்ளனர்.

உடனடியாக அத்தேசிக்காயை பெற்ற அப்பெண் வீட்டின் உள்ளே சென்று பரிகாரம் நிறைவேற அதை வைத்துவிட்டு வந்துள்ளார்.

அச்சமயம் உடனடியாக செயற்பட்ட இரு இந்தியர்களும் ஏற்கனவே தயாராகி கொண்டு வந்த பிறிதொரு மூடப்பட்ட மண்சட்டியை அவ்விடத்தில் மாற்றியதுடன் பூஜையை நிறுத்தி பின்னர் தங்க நகை அடங்கிய மண்சட்டியை தம்வசம் எடுத்துகொண்டுஅந்தபெண்ணிடம்3நாள் களில் பின்னர் மண்சட்டியை திறந்து பார்க் குமாறு கூறி விடைபெற்று சென்றுள்ளனர்.

பின்னர் குறித்த உணவகத்திற்கு வந்த உணவக உரிமையாளர் தனது மனைவிடம் கழுத்தில் கிடந்த நகை எங்கே என்று கேட்டுள்ளார்.

இதன்போது நடந்த அனைத்து விடயங்களையும் அப்பெண் கூறியுள்ளார்.

உடனடியாக செயற்பட்ட உணவக உரிமையாளர் 2 இந்தியர்களால் 3 நாள்களின் பின்னர் திறக்க கூறிய மண்சட்டியைதிறந்துபார்த்துள்ளார். அங்கு அவர்களுக்கு அதிர்ச்சியே மிஞ்சியது.

உடனடியாக 2 இந்தியர்கள் குறித்து தேடுதல்மேற்கொண்டபாதிக்கப்பட்டவர்கள் ஏமாற்றத்துடன் கல்முனை பொலிஸ் நிலையத்தில் இறுதியாக முறைப்பாடு மேற்கொண்டுள்ளனர்.( 05)

# விளக்கமறியல் நீடிப்பு

சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் உயிரிழந்த சிறுவனின் மரணம் தொடர்பில் கைதாகி விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த அப்பாடசாலையின் மேற்பார்வையாளரான பெண்ணை மேலும் 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்குமாறும், இது தொடர்பான வழக்கை எதிர் வரும் ஜனவரி மாதம் 04ஆம் திகதி வரை மறு விசாரணைக்காக ஒத்திவைக்குமாறும் கல்முனை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அம்பாறையின் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சிறுவர் நன்னடத்தை பாடசாலையில் உயிரிழந்த சிறுவனின் மரணம் தொடர்பில் 28 வயதான அந்த பாடசாலையின் மேற்பார்வையாளரான பெண் சந்தேகத்தின் பேரில் கல்முனை தலைமையக பொலிஸா ரால் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

அதன் பின்னர், அவர் மீண்டும் கல்முனை நீதிமன்ற நீதிவான் எம்.எஸ்.எம். சம்சுதீன் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டபோதே மேற் கண்டவாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இவ்வழக்கு வியாழக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, உயிரிழந்தசிறுவனின் தந்தை மற்றும் சகோதரி ஆகியோர் நீதிமன்ற வளாகத்துக்கு வருகை தந்திருந்தனர்.

இதன்போது பொலிஸார் மற்றும் பிரதிவாதியின் சட்டத்தரணி ஆகியோரின் விண்ணப்பங்கள் மன்றில் ஆராயப்பட்டதை தொடர்ந்து, பாடசாலையின் மேற்பார்வையாளரை மீண்டும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (05)

# தனியார் பல்கலைக்கழக மாணவன் மோட்டார் சைக்கிள் விபத்தில் இறப்பு

கம்பளை கண்டி பிரதான வீதி யில் வெலிகல்ல நகரில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் தனியார் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்தில் மேலும் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் கம்பளை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளதாக தவுலகல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கம்பளை பகுதியைச் சேர்ந்த 19 வயதுடைய ஒத பந்துல பண்டார அலஹகோன் என்ற இளைஞனே விபத்தில் உயிரிழந்துள்ளார்.

வெலிகல்ல பகுதியைச் சேர்ந்த ஐம்பத்தைந்து வயதுடைய ஒருவரே படுகாயமடைந்துள்ளார்.

வியாழக்கிழமை அதிகாலை இரண்டு மணியளவில் இரண்டு மோட்டார் சைக்கிள்கள் மோதிக் கொண்டதில் இந்த விபத்து இடம் பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரி வித்துள்ளனர். (05)

# இலங்கையில் நடைபெறும் உள்நாட்டு பிரச்சினையில் ரஷ்யா தலையிடாது

இலங்கையில் நடைபெற்று வரும் உள்நாட்டுப் பிரச்சினை தொடர்பாக ரஷ்யா தலையிடவோ, விமர் சிக்கவோ போவதில்லை என இலங்கைக்கான ரஷ்ய தூதுவர் லெவன் ஸகார்யன் தெரிவித் துள்ளார்.

ரஷ்ய தூதரகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் - இறையாண்மை கொண்ட நாடு என்ற வகையில் இலங்கையால் தனது வெளியுறவுக் கொள்கையை சுதந்திரமாகச் செய்படுத்த முடியும். இலங்கையில் உள்நாட்டு விவகாரங்களில் கருத்துத் தெரிவிப்பதை நான் தவிக்கின்றேன்.

முக்கியமாக இலங்கையின் உள்நாட்டு விவகாரங்களில் விமர்சிக்கவோ அல்லது தலையிடவோ தாம் அமெரிக்கத் தூதரோ அல்லது பிரித்தானிய உயர் ஸ்தானிகரோ அல்லது மேற்கத் திய தூதர்களோ அல்ல. - இவ்வாறு அவர் தெரிவி த்துள்ளார். (05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
DESSERT
Ice Cream Cup
Fruit Salad
Ice Cream & Fruit Salad
Cream Caramel
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=

# ஒரே குடும்பத்தை சேர்ந்த மூன்று பெண்கள் கைது

## வவுனியாவில் அதிரடி

வவுனியாவில் ஹெரோயின் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் ஒரே குடும்பத்தை சேர்ந்த மூன்று பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து மேற்கொண்ட விசேட சோதனை நடவடிக்கையில் 16 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருகையில் -

பதில் பொலிஸ்மா அதிபரின் உத்தரவுக்கு அமைய நாடளாவிய ரீதியில் விசேட அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து விசேட போதைப்பொருள் ஒழிப்பு நடவடிக்கையை முன்னெடுத்தனர்.

வவுனியா சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு முன்பாக உள்ள வியாபார நிலையம் ஒன்றில் விசேட அதிரடிப் படையினர் மற்றும் பொலிஸார் இணைந்து சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டதுடன், குறித்த வியாபார நிலையத்தின் உரிமையாளரது தேக்கவத்தைப் பகுதியில் உள்ள வட்டிலும் சோதனை நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது 16 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து அதனை உழடமையில் வைத்திருந்த குற்றச்சாட்டின் அடிப்படையில் வியாபார நிலையத்தின் உரிமையாளரான பெண் மற்றும் அவரது மகள்கள் என மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் விசேட புலனாய்வு பிரிவின் தகவலுக்கமைய குறித்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதுடன், கைது செய்யப்பட்டவர்களை மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கையை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)

# யாழில் போதைப் பொருளுடன் பெண்கள் கைது பெருமளவான பணம் மற்றும் கைபேசியும் மீட்பு



யாழ்ப்பாணம், துன்னாலை பகுதியில் கடந்த மூன்று தினங்களில் போதைப்பொருள்களுடன் மூன்று பெண்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட பெண்களிடம் இருந்து பெருமளவான பணம், கையடக்க தொலைபேசிகள் மற்றும் போதைப்பொருள்கள் என்பவை மீட்கப்பட்டுள்ளன.

நெல்லியடி பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் துன்னாலை பகுதியைச் சேர்ந்த 43 வயதான பெண்ணொருவரைக் கைது செய்து, அவரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில். அவரிடம் இருந்து 620 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருள், 16 கையடக்க தொலைபேசிகள் மற்றும் 06 லட்சத்து 78 ஆயிரத்து 900 ரூபா பணம் என்பவை மீட்கப்பட்டுள்ளன.

குறித்த பெண்ணை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அதேவேளை, கடந்த செவ்வாய்க்கிழமை 51 வயதான பெண்ணொருவர் 06 கிராம் ஹெரோயின் போதைப் பொருளுடனும், மறுநாள் புதன்கிழமை 37 வயதான பெண்ணொருவர் 720 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடனும் 23 ஆயிரம் ரூபா பணத்துடனும் கைது செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# யாழ். தொழில்நுட்பவியல் கல்லூரியில் 2024 கற்கை நெறிக்கு விண்ணப்பம்

யாழ்ப்பாணம் தொழில்நுட்பவியல் கல்லூரியில் 2024 ஆம் ஆண்டிற்கான என்.வி.கியு. சான்றிதழ் தர (மட்டம் 3,4) மற்றும் என்.வி.கியு. டிப்ளோமா தர (மட்டம் 5,6) கற்கை நெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

தரம் 10 தகைமை உடையோர் முதல் க.பொ.த (உ.த) உயர்தர தகமை உடையோர் வரை கற்கக் கூடிய கட்டட நிர்மாணத்துறை, தன்னியக்க இயந்திரவியல், மின் மற்றும் இலத்திரனியல், வர்த்தகம் மற்றும் மொழித்துறை, கணணிசார், தொலைத்தொடர்பு தொழில்நுட்பவியல் போன்ற துறைகள் சார்ந்த 43 கற்கை நெறிகளுக்கும் மேலதிகமாக மாணவர்களை அனுமதிக்கக்கூடியதாக உள்ளது.

மேற்படி கற்கை நெறியைப் பயில விரும்பும் தகுதியுடையோர் பணிப்பாளர் தொழில்நுட்பவியல் கல்லூரி யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், தொழில்நுட்பக்கல்லூரியின் தொழில் வழிகாட்டல் நிலையத்துடன் நேரடியாகவோ அல்லது 0212220028, 0212222358 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாக பெற்றுக்கொள்ளலாம் மேலும், இங்கு முழு நேரகற்கை நெறிகள் முற்றிலும் இலவசமானவை என்பது குறிப்பிடத்தக்கது. (05)

# காலாவதியான பால் மா விநியோக நிலையமொன்று சுற்றிவளைப்பு

நுகர்வோர் விவகார அதிகார சபையின் சோதனைகள் மற்றும் விசேட புலனாய்வுப் பிரிவினர் புறக்கோட்டை உள்ள மொத்த விற்பனை நிலையங்களில் விசேட சோதனையை மேற்கொண்டனர்.

இதன்படி, புறக்கோட்டை பிரதேசத்தில் இயங்கி வந்த காலாவதியான பால் மா விநியோக நிலையமொன்றை நுகர்வோர் அதிகார சபையினர் சுற்றிவளைத்துள்ளனர்.

இதுதொடர்பில் நுகர்வோர் விவகார அதிகார சபையினர் தெரிவிக்கையில் -

விற்பனைக்கு தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்த 825 கிலோகிராம் காலாவதியான பால் மா தொகை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மொத்த விற்பனை நிலையத்தின் உரிமையாளருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்து மேலதிக விசாரணைகளை மேற்கொள்ளப்படவுள்ளது.-என குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், நாட்டின் பல்வேறு பகுதிகளில் இருந்து வரும் ஐஸ்கிரீம் மற்றும் இனிப்பு விற்பனையாளர்கள் இந்த காலாவதியான பால் மாவை எடுத்துச் செல்வது விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது. (05)



## போதைப் பொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழுவினரும் அதிகரிப்பதற்கு போராட்டக்களம் காரணமாக இருந்தது. அதனைநான்அச்சமின்றி கூறுகின்றேன்.

ஒருவருடமாக பொலிஸார் பேராட்டத்தினைக் கட்டுப்படுத்தும் செயற்பாட்டிலேயே பொலிஸார் ஈடுபட்டிருந்தனர். அவர்களுக்கு அப்போது குற்றங்கள் தொடர்பில் ஆராய்வதற்கு நேரமிருந்திருக்கவில்லை. எனினும், அக்காலத்தில் போதைப்பொருள் கடத்தல்களுடன் தொடர்புடையவர்களைதேடிசுற்றிவளைப்புக்களை ஆரம்பிக்குமாறு பணிப்புரை விடுத்திருந்தேன்.

ஊடகக் கண்காட்சிக்காக நாம் இவ்விதமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாக ஊடகங்களிலும், சமூக ஊடகங்களிலும் விமர்சிக்கின்றார்கள். சில சட்டத் தரணிகளும் இவ்வாறு விமர்சிக்கின்றார்கள். போதைப் பொருள் கடத்தல்காரர்களுடனும், பாதாளக் குழுக்களுடன் தொடர்புடையவர்களும் தான் எம்மை விமர்சிக்கின்றார்கள்.

சில மதகுருமார்களும், சட்டத்தரணிகளும்போதைப்பொருள் கடத்தல் காரர்களுடனும், பாதாளக் குழுக்களுடனும் தொடர்புகளைக் கொண்டுள்ளனர். அதன்காரணமாக அவர்கள் பதற்றமடைந்து எம்மை விமர்சிக்கின்றனர். என் மீதும், பொலிஸ் மா அதிபர் மீது சேறுபூசுகின்றனர்.

அவ்வாறு சேறு பூசுகின்றபோது அச்சமடைந்து நாம் பின்வாங்குவோம் என்று அவர்கள் எண்ணுகின்றார்கள். எந்த இடையூறு வந்தாலும், எந்த அச்சுறுத்தல் வந்தாலும் நாம் இச்செயற்பாட்டை நிறுத்தப்போவதில்லை.

நான் அமைச்சுப் பதவி யில் இருக்கும் வரையில் பாதாளக் குழுவினரின் செயற்பாடுகளை அனுமதிக்கப்போவதில்லை. யார் என்னகூறினாலும்இந்தச்செயற்பாடு தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படும் என்றார்.

## ஒரே நாளில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கஞ்சாசெடிகள், 438 கிராம்ஹசீஸ்,11 கிலோ கிராம் மாவா, 534 கிராம் குஷ், 32 கிராம் தூள், 01 கிலோ கிராம், 200 கிராம் போதை குழிசைகள் மற்றும் 20,615 போதைப்பொருள் குளிசைகள் இவ்வாறு கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப்பட்ட 1,676 பேரில் 119 சந்தேக நபர்கள் தடுப்பு காவலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்கள்.அத்துடன் 45 சந்தேகநபர்களின் சொத்துக்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாகியுள்ள 112 பேர் புனர்வாழ்வு மத்திய நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

பொலிஸ் போதைப்பொருள் தடுப்பு மற்றும் விசேட அதிரடி படையினரின் பெயர் பட்டியலில் இருந்த 132 சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். போதைப்பொருள் ஒழிப்பு பிரிவு மற்றும் விசேட அதிரடி படையினர் நாடளாவியரீதியில்போதைப்பொருள் வர்த்தகத்தில்ஈடுபடும் 4,665 பேரை அடையாளப்படுத்தியுள்ளனர்.

மேல்மாகாணத்தில் 1,625 பேர், தென்மாகாணம் 509 பேர்,மத்திய மாகாணம் 346 பேர், வடக்கு மாகாணம் 312 பேர், சப்ரகமுவ மாகாணம் 414 பேர், ஊவா மாகாணம் 331 பேர், வட மத்திய மாகாணம் 381 பேர், வடமேல் மாகாணம் 394 பேர், கிழக்கு மாகாணம் 353 பேர் என்ற அடிப்படையில் போதைப்பொருள் வர்த்தகர்கள் நாடளாவிய ரீதியில் உள்ளார்கள்.

கடந்த 17 ஆம் திகதி முதல் வெள்ளிக்கிழமை வரை முன்னெடுக்கப்பட்ட விசேட சுற்றிவளைப்புகளில் 3,640 போதைப்பொருள் வர்த்தகர்கள் கைது செய்யப்பட்டுள்ளன.



# உலகப் போக்கு தரும் அச்சம்....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

**விசித்திரமான சித்திரம்**

இந்த அணிச் சேர்க்கைகள் மீண்டும் பனிப்போர் காலம், உலகப் போர் போன்றவற்றுக்கு இட்டுச்செல்லுமா என்ற கேள்வி எழாமல் இல்லை. அணு ஆயுதங்களால் உலகப் போரைத் தடுக்க முடியும் என்ற அசட்டு நம்பிக்கை இன்றைய அணு ஆயுதப் பெருக்கத்துக்குப் பிறகு தகர்ந்துவிட்டது.



அணு ஆயுத நாடுகள் அணிகளாகச் சேர்ந்து போரில் ஈடுபட்டாலோ, போர்களைத் தூண்டிவிட்டாலோ அதனை இராணுவத் தலையீட்டின் மூலம் தடுக்க முடியாது என்ற நிலையில் போர் நடவடிக்கைகள் பெருகவே வாய்ப்பு அதிகம் இருப்பது தெரிகிறது; இது மாபெரும் பின்னடைவு.

இதையெல்லாம் கடந்து, மிக வேகமாகச் சீர்கெட்டுவரும் உலகின் இயற்கைச் சூழல் குறித்து உலக நாடுகளின் அரசுகளால் எதுவும் செய்ய முடிவதில்லை. புவி வெப்பமாதலைத் தடுக்க, வளிமண்டலத்தில் காா்பன் அளவைக் குறைக்க முடியவில்லை. அறிவியல் ஏதேனும் அதிசயத் தீர்வை தருமா என்று பார்க்கிறார்களே தவிர, முதலீட்டிய வளர்ச்சி, உற்பத்தி-நுகர்வுப் பெருக்கம் ஆகியவற்றைக் கட்டுப்படுத்து-வது குறித்தோ, உலகப் பொது நன்மையை முன்னிறுத்து-வது குறித்தோ சிந்திக்க முடியவில்லை.

இயற்கைப் பேரிடர்களின் பெருக்கம், உலக நாடுகள் பலவற்றையும் தாக்கி வருவதைச் செயலற்றுப் பார்க்கிறோம். அதனால்தான் பெருகும் செயற்கை நுண்ணறிவும், அருகும் பொது நன்மைச் சிந்தனையும், இந்த ஆண்டு நமக்களித்த வரலாற்றுச் சித்திரமாக உள்ளது.

# மாத்தறை சிறையில் நோய்த்தொற்றால் கைதி சாவு; 8 பேர் வைத்தியசாலையில்

மாத்தறை சிறைச்சாலையில் நோய்த் தொற்று காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சிறைக் கைதிகளில் ஒருவர் உயிரிழந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகரித்த காய்ச்சல் காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட கைதியொருவரே இவ்வாறு உயிரிழந்துள்ள நிலையில், அவர் மூளைக்காய்ச்சல் காரணமாக உயிரிழந்திருக்கக்கூடும் என சந்தேகிப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, மேலும் 8 சிறைக்கைதிகள் அதே அறிகுறிகளுடன் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக சிறைச்சாலைகள் ஆணையாளர், ஊடகப் பேச்சாளர் காமினி பி திஸாநாயக்க தெரிவித்தார்.

இந்நிலையில், சுகாதார வழிகாட்டுதல்களுக்கு அமைய சிறைச்சாலையின் செயற்பாடுகளை மட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை ஆணையாளர் காமினி பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார் .

மாத்தறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகளை அங்குணுகொலபலஸ்ஸ சிறைச்சாலைக்கு அனுப்புமாறு சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகம் உத்தரவிட்டுள்ளார்.

கைதிகளை பார்வையிட வருவோர் சுகாதாரப் பரிந்துரைகளுக்கு அமைய பார்வையிட வேண்டும் என சிறைச்சாலை ஊடகப் பேச்சாளர் காமினி பி. திஸாநாயக்க மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# போதைப்பொருள் கடத்தல் தம்பதியினரின் வீட்டிலிருந்து 3 கோடி ரூபாய் சொத்து மீட்பு

கம்பஹா -பெம்முல்லை பிரதேசத்தில் போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் தம்பதியினரின் வீட்டிலிருந்து மூன்று கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள் பொலி-ஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்கள் குறித்த பிரதேசத்தை விட்டு தலைமறைவாகி உள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக்கிடைத்த தகவலின் பேரில் சந்தேக நபர்களது வீட்டை சோதனையிட்ட போது 2 பஸ்கள், 2 சிறிய லொறிகள், முச்சக்கர வண்டிகள், 5 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் தொலைக்காட்சி பெட்டி என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)



காலைக்கதிர் Kalaikkathir

# கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைக்கு ரோட்டறி கழகத்தால் மருத்துவ உபகரணங்கள்

கிளிநொச்சிவைத்தியசாலைக்கு6.6கோடிபெறுமதி யான உடல் குழாய் உற்று நோக்கல் இயந்திரம் ரோட்டரி கழகத்தால் கையளிக்கப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை வைத்தியசாலை மண்டபத்தில் வைத்து இந்த நிகழ்வு இடம்பெற்றது.

கொழும்பு ரொட்டரி கழகத்தின் ஏற்பாட்டில் ஆஸ்திரேலியன் மெடிக்கல் பவுண்டேசனின் நிதி பங்களிப்புடனும் சர்வதேச ரொட்டரி கழகங்களால் 6.6 கோடி ரூபா பெறுமதியான குறித்த மருத்துவ பரிசோதனை இயந்திரம் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் விருந்தினர்கள் வரவேற்கப்பட்டு, மங்கள விளக்கேற்றலுடன் நிகழ்வு இனிதே ஆரம்பமானது.

அதனைத் தொடர்ந்து 6.6 கோடி ரூபா பெறுமதியான உடல் குழாய் உற்று நோக்கல் இயந்திரம் வைத்தியசாலையிடம் கையளிக்கப்பட்டது.

2017 ஆம் ஆண்டு முதல் உடல் குழாய் உற்று நோக்கல் பரிசோதனை வசதி கிளிநொச்சி வைத்தியசாலைக்கு இல்லாமையால் நோயாளர்கள் பல்வேறு சிரமங்களை எதிர் கொண்டு வந்துள்ளனர்.

அவசர தேவைகளின் நிமித்தம் நோயாளர்கள் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு பரிசோதனைக்காக அனுப்பிவைக்கப்பட்டும் வந்தனர்.

கிளிநொச்சி மாவட்ட மக்கள் மாத்திரமல்லாது முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள வைத்தியசாலை, மூங்கிலாறு மாங்குளம், மல்லாவி, புதுக்குடியிருப்பு ஆகிய பிரதேச வைத்தியசாலைகள், யாழ். மாவட்டத்தில் வடமராட்சியிலுள்ள வைத்தியசாலை மற்றும் மன்னார் இலுப்பைக்கடவை ஆடிக்காட்டிவெளி ஆகிய பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகள் என்பன கிளிநொச்சி வைத்தியசாலைக்கு அண்மையிலுள்ள வைத்தியசாலைகளாக காணப்படுவதால் மூன்று மாவட்டங்களில் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த மக்களும் இவ் வைத்தியசாலையில் சிகிச்சை பெற முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இந்நிலையில் குறித்த மருத்துவ பரிசோதனை இயந்திரத்தின் மூலம் சிகிச்சைக்காக வருகை தரும் நோயாளர்களுக்கான பரிசோதனைகள் ஜனவரி மாதம் முதல் முன்னெடுக்கும் வகையில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் எஸ்.சுகந்தன் தெரிவித்தார். நிகழ்வில் ரொட்டரி கழக உறுப்பினர்கள், வைத்தியர்கள், தாதியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

(05)



# போதைப்பொருளை சிறைச்சாலைக்குள் கொண்டு சென்ற இரு அதிகாரிகள் கைது

போதைப்பொருள், சிகரெட், பீடிகள் மற்றும் கைத்தொலைபேசி ஆகியவற்றை அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலைக்குள் கொண்டுவர முயன்ற இரண்டு சிறைச்சாலை அதிகாரிகள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையில் கடமையாற்றும் சிறைச்சாலையின் தொழிற்கல்வி ஆலோசகர் மற்றும் சிறைச்சாலை கண்காணிப்பாளர் ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் .

விசேட அதிரடிப்படையினர், இராணுவம் மற்றும் பொலிஸார் இணைந்து வெள்ளிக்கிழமை நடத்திய விசேட சோதனை நடவடிக்கையின்போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து 110 மில்லி கிராம் போதைப்பொருள், 2 பிடிகள், ஒரு சிகரெட் பெட்டி, சிறிய கையடக்கத் தொலைபேசி என்பன பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதானவர்கள் அங்குனுகொலபெலஸ்ஸ நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன் அங்குனுகொலபெலஸ்ஸ பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (05)

# அரச காணிகளைப் பெற்றுத் தருவதாக கூறிப் பணம் பெற்ற ஐந்து பேர் கைது

அரச காணிகளை தருவதாக கூறி மக்களை ஏமாற்றி பணம் பெற்றுக்கொண்ட சந்தேகநபர்கள் ஐவர் நேற்று (சனிக்கிழமை) கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் அதிகாரிகள் போல் நடித்து அரசாங்க காணிகளை விலைக்கு பெற்றுத்தருவதாக கூறி குருநாகல் ரிதிகம, தொடங்கஸ்லந்த பிரதேச மக்களை ஏமாற்றி பணம் பெற்றுக்கொண்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் ஐவரும் மாத்தளை மற்றும் குருநாகல் பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் என்பதுடன் 30 , 33, 27 , 48 , 65 வயதுடையவர்கள் என பொலிஸார் மேலும் தெரிவித்தனர் .

காணி வழங்குவதாக கூறி ஒருவரிடம் இருந்து ஒரு லட்சம் ரூபா பணத்தை பெற்றுள்ளதாக பொலிஸாருக்கு முறைப்பாடு கிடைத்துள்ளதுடன் இது தொடர்பில் காணி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் பொலிஸார் விசாரணை மேற்கொண்ட போது கைதானவர்கள் காணி சீர்திருத்த ஆணைக்குழு என்ற ஸ்டிக்கர்கள் மற்றும் பெயர் பலகைகளை காட்சிப்படுத்தியவாறு வானில் ரிதிகம கோவிலுக்கு சென்றதாகவும் காணி திணைக்களம் என எழுதப்பட்ட ஆடைகளை அணிந்திருந்ததாகவும் விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை ரிதிகம பொலிஸார் மேற்கொண்டு வருவதோடு சந்தேகநபர்கள் ஐவரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(05)




# மக்களை எச்சரிக்கும் அறிவுறுத்தல்கள் பொலிஸார் தரப்பில் வெளியிடவில்லை

## சமூகவலைத்தளப் பதிவுகள் குறித்து பொலிஸ் ஊடகப்பேச்சாளர்



தற்போதைய பொருளாதார நெருக்கடியை அடுத்து மக்களை எச்சரிக்கும் வகையிலான அறிவுறுத்தல்கள் எவற்றையும் தாம் வெளியிடவில்லை என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியின் காரணமாக மக்களை மிகவும் அவதானமாக இருக்குமாறு இலங்கை பொலிஸாரால் அறிவுறுத்தப்பட்டிருப்பதாகவும், அதற்கமைய சில விடயங்கள் வலியுறுத்தப்பட்டிருப்பதாகவும் செய்திகளும், பதிவுகளும் பேஸ்புக் மற்றும் வட்ஸ் அப் ஆகியவற்றில் பகிரப்பட்டுவருகின்றன. இது தொடர்பாக இலங்கைப் பத்திரிகை ஸ்தாபனத்தைத் தளமாகக்கொண்டு இயங்கிவரும் 'பக்ற்ஸ்பீக்கர்' இனால் ஆராய்ந்து வெளியிடப்பட்டுள்ள தெளிவுபடுத்தலிலேயே மேற்கண்ட விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இலங்கைப் பொலிஸாரால் வெளியிடப்பட்டிருப்பதாகப் பகிரப்பட்டுவந்த பதிவுகளில் 'விலையுயர்ந்த கடிகாரங்களை அணியாதீர்கள், விலையுயர்ந்த மாலைகள், வளையல்கள், காதணிகளை அணியாதீர்கள், உங்கள் கைப்பைகள் தொடர்பில் கவனமாக இருங்கள், ஆண்கள் விலையுயர்ந்த கைக்கடிகாரங்கள், விலையுயர்ந்த செயின்கள் அணிவதைத் தவிர்க்க வேண்டும், உங்கள் விலை உயர்ந்த கையடக்க தொலைபேசிகளை பொது இடங்களில் பயன்படுத்தாதீர்கள், அந்நியர்களை காரில் அழைத்துச் செல்வதை தவிர்க்கவும், தேவைக்கு அதிகமான பணத்தை எடுத்துச் செல்ல வேண்டாம், நீங்கள் பயணம் செய்யும் போது உங்கள் ஏ.டி.எம் மற்றும் கிரெடிட் கார்ட்களை பாதுகாப்பாக வைத்திருங்கள்' ஆகிய அறிவுறுத்தல்கள் உள்ளடங்கியிருந்தன.

இதுகுறித்து பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவவிடம் 'பக்ற ஸ்பீக்கர்' இனால் வினவப்பட்டபோது, இலங்கை பொலிஸ் திணைக்களத்தால் அவ்வாறான அறிவிப்பு எதுவும் வெளியிடப்படவில்லை என அவர் உறுதிப்படுத்தியுள்ளார். அதுமாத்திரமன்றி இந்த அறிவிப்பு சில மாதங்களுக்கு முன்னர் சமூக வலைதளங்கள் ஊடாகப் பகிரப்பட்டதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (05)

# சிறிலங்கன் எயார்லைன்ஸில் இணைந்தது புதிய விமானம்

சிறிலங்கன் எயார்லைன்ஸ் நிறுவனத்துக்கு எயார்பஸ் ஏ-320 விமானம் குத்தகை அடிப்படையில் வாங்கப்பட்டுள்ளது.

மலேசியாவில் இருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு வியாழக்கிழமை விமானம் கொண்டு வரப்பட்டுள்ளது.

அத்துடன், இவ்விமானம் எதிர்வரும் 29 ஆம் திகதி மாலைத்தீவுக்கு தனது முதலாவது பயணத்தை மேற்கொள்ள உள்ளது.

இந்த விமானத்தின் மூலம் சிறிலங்கன் விமான சேவைக்கு சொந்தமான விமானங்களின் எண்ணிக்கை 22 ஆக அதிகரித்துள்ளது.

அடுத்த ஆண்டு ஜனவரியில் மற்றொரு ஏர்பஸ் ஏ-330 விமானத்தையும், மார்ச் மாதத்தில் மற்றொரு ஏர்பஸ் விமானத்தையும் குத்தகை அடிப்படையில் வாங்க திட்டமிடப்பட்டுள்ளது.

மேலும், தற்போது பாவனையில் இல்லாத 02 விமானங்களுக்கு இரண்டு இயந்திரங்களை குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (05)

# சட்டவிரோத மது உற்பத்தி நிலையம் மொரட்டுவையில் கைப்பற்றப்பட்டது

## உரிமையாளர் கைது

மொரட்டுவை-உயனபிரதேசத்தில் சட்டவிரோதமான முறையில் மதுபானம் உற்பத்திசெய்யப்படும் தொழிற்சாலையொன்றை நடத்திய சந்தேகநபர் ஒருவர் மொரட்டுவை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் மொரட்டுவை உயன பிரதேசத்தை சேர்ந்த 59 வயதுடையவர் என மொரட்டுவ பொலிஸார் தெரிவித்தனர்.

கலால்திணைக்களஅதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது இத்தொழிற்சாலையிலிருந்து ஐந்து லட்சம் ரூபா பெறுமதியான 58 மதுப் போத்தல்கள், காய்கறிகள் மற்றும் பழங்களைபயன்படுத்தியாரிக்கப்பட்ட மதுபானங்கள் , இரண்டு வெற்று போத்தல்கள், விளம்பர பதாகைகள் போன்றவற்றை கலால் திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றியுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின் போது மதுதொழிற்சாலையில் உற்பத்திசெய்யப்படுகின்றமதுபானங்களைவிற்பனை செய்வதற்கான இணையத்தளம் உருவாக்கப்பட்டுள்ளதாகவும், இதன் மூலம் ஓடர்களை பெற்று சில காலமாக பெருமளவில் இந்த மது தொழிற்சாலை இயங்கி வருவதாகவும் தெரியவந்துள்ளது.

அத்துடன் பண்டிகை காலத்தை இலக்காகக் கொண்டு ஏனைய காலங்களைவிட அதிகளவில் மது உற்பத்தி செய்யப்பட்டுள்ளதாகவும், சமூக ஊடகங்களில் கியுஆர் குறி யீடுகளை பயன்படுத்தி மிக அதிக விலைக்கு மதுபானங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாகவும் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

இந்த சட்டவிரோத மது தொழிற்சாலைக்கு வர்த்தக உரிமம் வழங்கமொரட்டுவமாநகரசபைஏற்பாடு செய்துள்ளதுடன் பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற விற்பனைக் கண்காட்சிகளிலும் இந்த சட்டவிரோத மது பானங்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளதுடன் இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மொரட்டுவை உயன பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

# போதைப்பொருள் விற்பனை பல்கலை மாணவன் கைது

குஷ் போதைப்பொருளை பொதி செய்து போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்ட பேராதனைப் பல்கலைக்கழக விஞ்ஞான பிரிவு மாணவர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த சம்பவம் வெள்ளிக்கிழமை இடம் பெற்றுள்ளது.

கைது செய்யப்பட்டவர் இரத்தினபுரி பிரதேசத்தை சேர்ந்த பேராதனை பல்கலைக்கழகத்தின் 2014 ஆம் ஆண்டின் விஞ்ஞான பிரிவை சேர்ந்த மாணவராவார்.

இவர் பல்கலைக்கழக பரீட்சைக்கு தோற்றாத காரணத்தால் இதுவரை பட்டம் பெறவில்லை எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

கண்டி, கண்ணொரு பிரதேசத்தில் ஹூஷ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவரிடமிருந்து கிடைத்த தகவலின் பேரில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடத்திலிருந்து 15 கிராம் நிறையுடைய ஹூஷ் போதைப்பொருள் பொலிஸாரால் கைப் பற்றப்பட்டுள்ளது.

இவர் கண்டி, முறுத்தலாவை பிரதேசத்தில் உள்ள வீடொன்றை வாடகைக்கு பெற்று போதைப்பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்துள்ளார்.

இவருடன் மேலும் இரண்டு பல்கலைக்கழக மாணவர்கள் வசித்து வந்துள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

சோதனையின் போது இவர்கள் இருவரும் வீட்டில் இருக்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர்.

இவர்கள் இருவரும் போதைப்பொருள் விற்பனையுடன் தொடர்புடையவர்களா என்பது தொடர்பிலான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# 54 வயதான சீன பிரஜை மாயம்!

பயாகல கடலில் அலைச்சறுக்கு விளையாட்டில் ஈடுபட்டிருந்த 54 வயதான சீனப் பிரஜை ஒருவர் வியாழக்கிழமை நீரில் மூழ்கிக் காணாமற் போயுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சீனபிரஜை, பயாகலவடக்கு பிரதேசத்தில் உள்ள சுற்றுலா விடுதி ஒன்றில் தங்கியிருந்த நிலையிலேயே இவ்வாறு காணாமற் போயுள்ளார்.

இந்நிலையில் குறித்த நபரை தேடும் பணிகள் தீவிரமாக இடம்பெற்று வருவதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது. (05)

# போதைப் பொருள்களுடன் 52 பேர் பலாங்கொடையில் கைதாகினர்

பலாங்கொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட பொலிஸ் விசேட சோதனையில் போதைப்பொருள்களுடன் 52 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த விசேட சோதனை நடவடிக்கை வெள்ளிக்கிழமை இடம்பெற்றுள்ளது.

பலாங்கொடை பஸ் நிலையத்திற்கு அருகிலிருந்து 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

விசாரணையில் 71 கிராம் ஐஸ் போதைப்பொருள், 3 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் 550 கிராம் கஞ்சா போதைப்பொருள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (05)

# மழையால் யாழ். மாவட்டத்தில் நெற்செய்கைக்குப் பாதிப்பு

யாழில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக பல ஏக்கர் நெற்செய்கை அழிவடைந்துள்ளதாக யாழ். மாவட்ட விவசாய பணிப்பாளர் திருமதி கைலேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

வேலணை பிரதேச செயலர் பிரிவில் 7.04 ஏக்கரும், காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 3.325 ஏக்கரும், சங்கானை பிரதேச செயலர் பிரிவில், 18.75 ஏக்கரும், பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 17 ஏக்கர் நெல் செய்கை பாதிக்கப்பட்டுள்ளன.

அதேவேளை, யாழ். மாவட்டத்தில் 9.125 ஏக்கர் மரக்கறி செய்கையும் அழிவடைந்துள்ளன. அதில் அதிக பட்சமாக சங்கானை பிரதேச செயலர் பிரிவில் , 08.875 ஏக்கர் அழிவடைந்துள்ளது. -இவ்வாறு தெரிவித்துள்ளார். (05)

# தமிழ் அரசியல் கைதிகள் விடுவிக்கக்கோரி ஜனாதிபதியிடம் மனு கையளிக்க தீர்மானம்

*சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் ஜனாதிபதிக்கு மனு வழங்குவதற்கான கலந்துரையாடல் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.*

*வடக்கிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள ஜனாதிபதிக்கு 28 வருடங்களாக சிறையில் வாடுகின்ற அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் மகஜர் ஒன்றைத் தயாரிக்கும் முகமாக குறித்த பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் இடையேயான சந்திப்பு குரலற்றவர்களின் குரல் அமைப்பு ஒழுங்குபடுத்தியது.*

*யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் இடம்பெற்ற சந்திப்பில் அரசியல் கைதிகளின் உறவினர்கள், காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள், சிவில் சமூகத்தினர், அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.*

*இதன்பின்னர் கருத்து தெரிவித்த குரலற்றவர்களின் குரல் அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன் -*

*28 வருடங்களுக்கு மேலாக சிறையில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை விடுவிப்பது தொடர்பில் ஜனாதிபதிக்கு மகஜர் ஒன்றை வழங்கவுள்ளோம். இதற்கு சகல பொது அமைப்புகளும் ஒன்றிணைய வேண்டும். பொதுமன்னிப்பின் அடிப்படையில் அனைத்து தமிழ் அரசியல் கைதிகளும் விடுவிக்கப்பட வேண்டும். இதற்கு ஜனாதிபதி நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும். - என்றார்.*

*(05)*

# சட்டவிரோதமாக துப்பாக்கியை இலங்கைக்கு கொண்டு வந்த இங்கிலாந்து குடிமகன் கைது

*சட்டவிரோதமான முறையில் ரிவோல்வர் துப்பாக்கி, தோட்டாக்கள் மற்றும் சிறிய கத்திகளைக் கொண்டு வந்த இங்கிலாந்து பிரஜை ஒருவர் கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளார். இந்த சம்பவம் வெள்ளிக் கிழமை இடம்பெற்றுள்ளது. கைதுசெய்யப்பட்டவர் 54 வயதுடைய இங்கிலாந்து பிரஜையாவார்.*

*இவர் இங்கிலாந்திலிருந்து ஸ்ரீலங்கன் ஏயார்லைன்ஸ் விமானம் மூலம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார்.*

*விமான நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போதே இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.*

*இவர் இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து அதிகார சபையின் அனுமதியின்றி ஆயுதங்களை கொண்டு வந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். குறித்த ரிவோல்வர் துப்பாக்கி இவரது பாட்டி இவருக்கு பரிசாக கொடுத்ததாக விசாரணையில் தெரியவந்துள்ளது.*

*கைது செய்யப்பட்டவர் நீர்கொழும்பு நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார் எனகட்டுநாயக்கவிமானநிலைய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.*

*(05)*




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 24.12.2023இல் வெளியிடப்பெற்றது.